*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

***No. LGS/PRO/2021*** ***29 ஏப்ரல், 2021***

**பத்திரிகை செய்தி**

புதுச்சேரியில் கொரோனா பரவலைத் தடுக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக சித்தா, ஆயுர்வேதம், ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம் போன்ற இந்திய மருத்துவ முறைகளை கொரோனா சிகிச்சைக்கு பயன்படுத்துவது குறித்த இணையவழி கருத்தரங்கம் இன்று (29-04-2021) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கருத்தரங்கத்திற்கு தலைமை தாங்கினார். புதுச்சேரி, தமிழகத்தை சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவர்கள் டாக்டர் கு. சிவராமன், டாக்டர். வெங்கடேசன், டாக்டர் R. மீனாகுமாரி, டாக்டர். T. ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்திய மருத்துவ முறை சிகிச்சைகளைப் பயன்படுத்துவது குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், உணவே மருந்தாக பயன்படும் விதம் குறித்தும், யோகம் மற்றும் மூச்சுப் பயிற்சி முறைகள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு வழிவகுப்பதையும் எடுத்துக் கூறினர்.